# விதைப்பதற்கு முன்பிருக்கும் மண்

வேறு எதனாலும் இயலாத ஒன்றினை
*ஷ்ரத்தா* விதைக்கிறது

## தாஜி

**பூஜ்ய ஸ்ரீ சாரிஜி மகராஜ் அவர்களின்**
99வது பிறந்தநாள் ஆண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்டது
ஜூலை 24, 2026

# விதைப்பதற்கு முன்பிருக்கும் மண்

வேறு எதனாலும் இயலாத ஒன்றினை
*ஷ்ரத்தா* விதைக்கிறது

அன்பார்ந்த நண்பர்களே,

ஒரே தியான மண்டபத்தில் அமர்ந்திருக்கும் இரு நபர்கள், ஒரே பிராணாஹுதியைப் பெற்று, ஒரே மாதிரியான வழிகாட்டுதல்களைக் கேட்டு, ஒரே நேரத்தில் கண்களை மூடி தியானம் செய்வதாக எண்ணிப் பாருங்கள். தியானம் முடிந்து, அவர்களில் ஒருவர் கண் விழித்ததும், அவரது உள்நிலையானது, முதன்முறையாக வடக்குத் திசையைக் கண்டறிந்த ஒரு திசைகாட்டியைப் போன்று, மிகவும் அமைதியாகவும் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப இயலாத வகையிலும் மாறியிருந்தது. மற்றொருவர் கண் விழித்ததும், நேரத்தைப் பார்த்துவிட்டு, மற்றவர்கள் என்ன உணர்ந்திருப்பார்கள் என்று சிந்திக்கத் தொடங்குகிறார். அவ்விருவருக்கும் அளிக்கப்பட்ட பிராணாஹுதி, வழிகாட்டுதல்கள் மற்றும் அவ்விடத்திலுள்ள அமைதி அனைத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன, எனினும் அங்கு ஒரு வேறுபாடு உள்ளது. அது என்ன? இந்தக் கேள்வியை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்; நாம் மீண்டும் இதைப் பற்றிப் பேசுவோம்.

இதே போன்று, ஒரு பாத்திரத்தில் உள்ள நீரில் ஒரு உருளைக்கிழங்கும், ஒரு முட்டையும் வேகவைக்கப்படுவதாகக் கற்பனை செய்து பாருங்கள். வேக வைப்பதற்குத் தேவையான நீர், வெப்பம் மற்றும் அவகாசம் என அனைத்தும் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், உருளைக்கிழங்கு மிருதுவாகிறது, ஆனால் முட்டையோ கடினமாகிறது. நமது அனுபவங்கள், நம்மை மலரச் செய்கின்றனவா அல்லது நம்முள் அதிக திரைகளை ஏற்படுத்துகின்றனவா என்பதை தீர்மானிப்பது, நாம் ஒவ்வொருவரும் நமக்குள் எதைக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். அது திறமை அல்லது தகுதியைச் சார்ந்தது அல்ல, ஆனால் மண்ணின் வளத்தைச் சார்ந்தது.

## மொழிபெயர்க்க இயலாத அந்த வார்த்தை

முந்தைய தொடர் அருட்செய்திகளில், ஒரு ஆர்வலருக்கும், அவருக்காகக் காத்திருக்கும் வாழ்க்கைக்கும் இடையில் இருக்கக்கூடிய ஏழு உள்முகத் தடைகளைப் பற்றி ஆராய்ந்தோம். எவ்வாறு ஆசை பிளவுபடுத்துகிறது, இயக்கமற்ற நிலை தேக்கமுறச் செய்கிறது, சந்தேகம் அரித்துவிடுகிறது, கர்வம் திரையிடுகிறது, பொறாமை முடக்குகிறது, முன்கணிப்பு ஜன்னல்களை மூடுகிறது, மேலும் இவை அனைத்திற்கும் ஆதாரமாக (தாயாக) திகழும் பயம், கதவை உள்ளிருந்தே பூட்டுகிறது என்பதைக் கண்டோம். ‘வாழ்ந்திடாத வாழ்க்கை’யில், நம்பிக்கை அந்தக் கதவைத் திறக்கும் சாவியை இயக்குகிறது என்பதையும், மறுபுறத்தில் நாம் முதலில் காண்பது ஒரு இலக்கினை அல்ல, மாறாக நிலத்தின் வளமான தன்மையை என்பதையும் கண்டறிந்தோம். முன்னோர்கள் இதை ‘ஷ்ரத்தா’ என்று அழைத்தனர்.

‘ஷ்ரத்தா’ என்பதன் ஆங்கில மொழிபெயர்ப்பு ‘பற்றுறுதி’ ஆகும், ஆனால் அது முழுமையான மொழிபெயர்ப்பு அல்ல.

பெரும்பாலும் பற்றுறுதி என்பது, உங்களால் நிரூபிக்க முடியாத ஒன்றின்மீது நம்பிக்கை கொள்வது என்று விவரிக்கப்படுகிறது, ஆனால் ஷ்ரத்தா என்பது அதைவிட மிகவும் உயிர்ப்புள்ள ஒன்று. அது திடநம்பிக்கை, தன்னம்பிக்கை, நேர்மை, உறுதி, விசுவாசம் மற்றும் உள்ளார்ந்த உறுதிப்பாடு ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து ஒளிரும் ஒரு நிலை. அது, மனம் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வதைப் பற்றியது மட்டுமல்ல, நமது அறிவாற்றல் ஆதாரங்களை ஆய்வு செய்து முடிப்பதற்கு முன்பே, நமது முழு இருப்பும், இதயத்தின் உண்மை நிலையோடு ஒத்திசைந்து இருப்பதாகும்.

பற்றுறுதி என்பது புனித நூல்கள் மற்றும் குருவின்மீது நம்பிக்கை கொள்ளுதல் மற்றும் அதன் மூலம் சாத்தியமானதை அடைதல் என்று கற்றறிந்தவர்கள் விவரிக்கின்றனர். இப்போது, 'நம்பிக்கை கொள்ளுதல்' என்ற சொல்லில் ஒரு சூட்சுமம் மறைந்துள்ளது: அது ஒரு கருத்தை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்வது அல்ல, மாறாக பிறர் கூறியதற்காக மட்டுமல்லாமல், அனுபவபூர்வமாக உணர்ந்த ஒரு உண்மையை நோக்கி, புலன்கள் ஒவ்வொன்றும் முனைப்புடன் ஒத்திசைந்து இருப்பதும் ஆகும்.

*'ஷ்ரத்தா' என்பதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 'பற்றுறுதி' ஆகும், ஆனால் அது முழுமையான மொழிபெயர்ப்பு அல்ல. பெரும்பாலும் பற்றுறுதி என்பது, உங்களால் நிரூபிக்க முடியாத ஒன்றின்மீது நம்பிக்கை கொள்வது என்று விவரிக்கப்படுகிறது, ஆனால் ஷ்ரத்தா என்பது அதைவிட மிகவும் உயிர்ப்புள்ள ஒன்று. அது திடநம்பிக்கை, தன்னம்பிக்கை, நேர்மை, உறுதி, விசுவாசம் மற்றும் உள்ளார்ந்த உறுதிப்பாடு ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து ஒளிரும் ஒரு நிலை.*

உள்முக அனுபவத்தை தெளிவாக விளக்குவதில் உயர் வித்தகரான பதஞ்சலி முனிவர், மிக உயர்ந்த மெய்யுணர்தலுக்கு வழிவகுக்கும் ஐந்து குணங்களின் வரிசையில் 'ஷ்ரத்தா'-வை முதலிடத்தில் வைத்தார்; அந்த ஐந்து குணங்கள்: 'ஷ்ரத்தா' (பற்றுறுதி), வீர்யா (சக்தி), ஸ்மிருதி (நினைவு), சமாதி (மூழ்குதல்) மற்றும் பிரக்ஞா (ஞானம்) ஆகும். இந்த வரிசையைக் கவனியுங்கள்: 'ஷ்ரத்தா', சக்தியை அல்லது செயல்படுவதற்கான விருப்பத்தைத் தூண்டுகிறது; சக்தி, நினைவை நீடித்திருக்கச் செய்கிறது; நினைவு, மூழ்குதலாக பண்படுகிறது; மூழ்குதல், ஞானமாக மலர்கிறது. இந்த முழு சங்கிலியும், முதல் இணைப்பைச் சார்ந்துள்ளது. 'ஷ்ரத்தா'-வை நீக்கிவிட்டால், தரைத்தளம் இல்லாத படிக்கட்டைப் போன்று, ஏனைய அனைத்தும் சரிந்துவிடும்.

## நீங்கள் எதிர்பார்த்திராத அந்த நம்பிக்கை

'ஷ்ரத்தா' என்பதை நாம் பெரும்பாலும் கடவுளின்மீது, குருவின்மீது மற்றும் நமது ஆன்மீகப் பயிற்சியின் மீதான நம்பிக்கையாகவே கருதுகிறோம், அது இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான். ஆனால், ஷ்ரத்தா என்பது நமக்கு மிக நெருக்கமான இடத்திலிருந்து, அதாவது நம்மிடமிருந்து தொடங்குகிறது என்பதை அறிவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். தன்னம்பிக்கை இல்லாதபோது, நம்மிடம் பற்றுறுதி இருப்பதில்லை. ஆன்மீகப் பாதையில் பயணிப்பதற்கான நமது திறமையின்மீது நாம் நம்பிக்கை கொள்ளாதவரை, அந்தப் பாதை எவ்வளவு மேன்மையானதாக இருந்தாலும் அதனால் பயனில்லை. நாம் சரியாகத்தான் தேர்வு செய்துள்ளோம் என்று நம்பாதவரை, தெய்வீக அருள் எவ்வளவுதான் கிடைத்தாலும் அது நமக்கு மனநிறைவை அளிக்காது. மீண்டும் மீண்டும் சந்தேகம் எழும்; அதற்குக் காரணம் போதுமான அளவு அனுபவம் கிட்டவில்லை

என்பது அல்ல, மாறாக நமது உணர்ந்தறியும் திறனை நாம் நம்ப மறுப்பதுதான்.

இதன் அர்த்தத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். ‘உறுதியான அடித்தளத்தை உருவாக்குதல்’ என்ற அருட்செய்தியில், பதினோரு ஆண்டுகள் தியானம் செய்தும், “இது உண்மை தானா?” என்று கேட்ட அந்தப் பெண்ணை நினைவிருக்கிறதா? அவரது பயிற்சி மிகச் சிறப்பாக இருந்தது, அவரைச் சுற்றியிருந்த அனைவருக்கும் அவரது மாற்றம் தெளிவாகத் தெரிந்தது; ஆனாலும் அவரால் அதை நம்ப முடியவில்லை. ஏன்? அவரது சந்தேகம் ஒருபோதும் பயிற்சியைப் பற்றியதாக இருக்கவில்லை, அவரைப் பற்றியதாகவே இருந்தது. தன்மைமாற்றம் அடைவதற்கு உறுதுணைபுரியும் அவரது திறன்மீது அவர் நம்பிக்கை கொள்ளவில்லை. கொதிக்கும் நீரில் உள்ள முட்டையைப் போல அவர் இருந்தார்; மென்மையாக்க வேண்டிய அந்த அனுபவமே அவரை மேலும் கடினமானவராக மாற்றியது. ஷ்ரத்தா, அந்த சந்தேகம் எழுவதற்கு வெகு முன்னதாகவே அதற்கான தீர்வை அளித்திருக்கும்; அதை, அவரது சந்தேகத்துடன் வாதிடுவதன் மூலமாக அல்லாமல், அந்தச் சந்தேகம் உள்ளே நுழைவதற்கு ஒரு சிறிய விரிசலைக் கூட கண்டறிய முடியாத அளவிற்கு, ஒரு உறுதியான அடித்தளத்தை அமைப்பதன் மூலமாக வழங்கியிருக்கும்.

*தன்னம்பிக்கை இல்லாதபோது, நம்மிடம் பற்றுறுதி இருப்பதில்லை. இந்தப் பாதையில் பயணிப்பதற்கான நமது திறமையின்மீது நாம் நம்பிக்கை கொள்ளாதவரை, அந்தப் பாதை எவ்வளவு மேன்மையானதாக இருந்தாலும் அதனால் பயனில்லை. நாம் சரியாகத்தான் தேர்வு செய்துள்ளோம் என்று நம்பாதவரை, தெய்வீக அருள் எவ்வளவுதான் கிடைத்தாலும் அது நமக்கு மனநிறைவை அளிக்காது.*

ஷ்ரத்தாவின் இந்தப் பரிமாணத்தை, நாம் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டும்: ஆன்மீக வாழ்வில் தெய்வீக சித்தத்திற்கு சரணடைவது எவ்வளவு அடிப்படையானதோ, அவ்வாறே நம்மீது நம்பிக்கை கொள்வதும் அடிப்படையான ஒன்றாகும். இவ்விரண்டிற்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லை; இவை வெவ்வேறு கோணங்களில் காணப்படும் ஒரே செயல்பாடுதான். எதையும் பற்றிக்கொள்ளாமல் விட்டுவிடும் அளவிற்கு உங்கள்மீது போதுமான திடநம்பிக்கை கொள்வது, சரணாகதி ஆகும். தெய்வீகத்தின் கவனத்தைப் பெற நீங்கள் தகுதியானவர் என்ற நம்பிக்கையுடன், அதன்மீது போதுமான திடநம்பிக்கை கொள்வது, தன்னம்பிக்கை ஆகும். ஷ்ரத்தா இவ்விரண்டையும் தன்னுள் கொண்டுள்ளது.

## அந்த மண்ணில் வளர்வது என்ன?

ஒரு விதையானது, தான் வளர்வதற்கான மண்ணைத் தேர்வு செய்வதில்லை, ஆனால் ஒரு ஆர்வலர் அதைச் செய்கிறார். ஆர்வலர் தயார்செய்யும் மண்தான் அதைத் தொடர்ந்து நிகழும் அனைத்தையும் தீர்மானிக்கிறது. உண்மையான நம்பிக்கை இல்லாத இடத்தில், உண்மையான அன்போ அல்லது உண்மையான சரணாகதியோ இருக்காது; நம்பிக்கை உண்மையாக இருக்கும்போது, ஆன்மாவின் உண்மையான சாரம் வெளிப்படுகிறது:

‘ஷ்ரத்தா’ எனும் மண்ணில்தான் அன்பு வளர்கிறது.
‘பக்தி’ என்பது தனது திசையைக் கண்டறிந்துவிட்ட அன்பு.
‘சரணாகதி’ என்பது பலன் மீதான தனது பற்றை விடுவித்துக் கொண்ட பக்தி.
‘ஐக்கியம்’ (ஒன்றிணைதல்) என்பது சரணாகதியையும் சமர்ப்பித்த பிறகு எஞ்சியிருக்கும் நிலை.

அந்த வரிசையை மீண்டும் மெதுவாக ஆராய்வோம்:

'ஷ்ரத்தா', அன்பிற்கு வழிவகுக்கிறது.
அன்பு, பக்திக்கு வழிவகுக்கிறது.
பக்தி, சரணாகதிக்கு வழிவகுக்கிறது.
சரணாகதி, 'லயாவஸ்தா' நிலைக்கு வழிவகுக்கிறது.

மொட்டு மலராகவும், மலர் கனியாகவும் மாறுவதைப் போன்று, ஒவ்வொன்றும் அதன் முந்தைய நிலையிலிருந்து இயல்பாகவே வளர்ச்சி அடைகின்றன. ஒரு மொட்டினை கட்டாயத்தினால் நீங்கள் கனிய வைக்க முடியாது என்றாலும், நீங்கள் மண்ணைத் தயார்செய்து, பின் சூரியன் அதன் பணியைச் செய்வதற்கு வழிவகுக்கலாம்.

இப்போது, அருட்செய்தியின் இந்தப் புதிய தொடர் முழுவதும், நம்மை சிந்தனையில் ஆழ்த்தப்போகின்ற உண்மை இதுதான்: 'லயாவஸ்தா' நிகழும்போதுதான், உண்மையான பயணம் தொடங்குகிறது. தயவுகூர்ந்து இந்த வாக்கியம் குறித்து சிறிது நேரம் அமைதியாக சிந்தியுங்கள். ஏறக்குறைய அனைத்து ஆன்மீக மரபுகளும் போதனைகளும் ஒன்றிணைதல்தான் இறுதி இலக்கு எனச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் அந்த இலக்கை அடைந்த மறைஞானிகள், அதைவிட மேலான ஒன்றைப் பற்றிப் பேசுகிறார்கள்: அதிஉயர்நிலை என்பது இலக்கு அல்ல, அது ஒரு நுழைவாயில் மட்டுமே. நீங்கள்

*'ஷ்ரத்தா' எனும் மண்ணில்தான் அன்பு வளர்கிறது.*

*'பக்தி' என்பது தனது திசையைக்
கண்டறிந்துவிட்ட அன்பு.*

*'சரணாகதி' என்பது பலன் மீதான தனது பற்றை
விடுவித்துக்கொண்ட பக்தி.*

*'ஐக்கியம்' (ஒன்றிணைதல்) என்பது
சரணாகதியையும் சமர்ப்பித்த பிறகு
எஞ்சியிருக்கும் நிலை.*

தேடிக்கொண்டிருப்பதாக நினைத்த அந்த வாழ்க்கை, நுழைவாயிலின் மறுபுறம் காத்திருக்கும் வாழ்க்கைக்கான ஒரு தயார்நிலை மட்டுமே. அந்த தயார்நிலை என்பது மண்ணின் வளத்தில் தொடங்குகிறது.

## அரைமனதாகவும் அல்ல, கண்மூடித்தனமாகவும் அல்ல

ஆழ்ந்த அர்த்தம் பொதிந்துள்ள மென்குரல் செய்தி ஒன்று உள்ளது: பற்றுறுதி என்பது ஒருபோதும் அரைமனதுடன் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கலாகாது. உங்களுடையது அவ்வாறாக இருப்பதாகத் தோன்றினால், தயவுகூர்ந்து உங்களது குறிக்கோள்களை மறுபரிசீலனை செய்து, அதற்கேற்ப செயல்படுங்கள். 'ஷ்ரத்தா' (பற்றுறுதி) என்பது ஆழ்ந்த ஈடுபாடும், உறுதியும் கொண்டது. அது அமைதியாக நீடித்து ஒளிரும் விளக்கைப் போன்றது. அதை எத்தகைய காற்றினாலும் அணைக்க முடியாது. ஏனெனில், அதன் சுடர் தீவிரமாக ஒளிர்வதினால் அல்ல, மாறாக அதன் ஆழத்தில் நிறைந்திருக்கும் எண்ணெயினால் தான்.

பற்றுறுதி என்பது கண்மூடித்தனமானதும் அல்ல. அது, உங்கள் உள்ளார்ந்த உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஏதோ ஒன்றிலிருந்து பிறக்கிறது. இதுதான் பற்றுறுதியை நம்பிக்கையிலிருந்து வேறுபடுத்துகிறது; பெரிதும் சிந்திக்காமல் பரம்பரையாகப் பெறும் சொத்தைப் போன்று, நம்பிக்கை என்பதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியும். உங்கள் பெற்றோரோ அல்லது உங்கள் சமூகமோ நம்புவதால் நீங்களும் நம்பலாம்; ஏனெனில் கேள்வி எழுப்புவதைவிட நம்பிக்கை கொள்வது எளிது. ஆனால் 'ஷ்ரத்தா' என்பது அவ்வாறு ஏற்படுவது அல்ல; அது நேரடியான அனுபவம் சார்ந்தது. தியானத்தில் அமர்ந்திருக்கும்போது, சிந்தனையால் உருவாக்க

முடியாத அல்லது நினைவாற்றலால் புனைய முடியாத ஒரு பிரசன்னத்தை நீங்கள் தெளிவாக உணரும்போது, ‘ஷ்ரத்தா’ என்பதை வளர்த்துகொள்ளத் தொடங்குகிறீர்கள். உங்கள் இதயமே அதற்கான சான்றாக மாறுகிறது.

இதனால்தான் ஹார்ட்ஃபுல்னெஸ் வழிமுறையில், தியானம் என்பது வெறும் உத்தி மட்டுமல்ல; அது ‘ஷ்ரத்தா’ என்பதை உருவாக்கும் ஒரு ஆய்வகமாகும். உண்மையான ஒன்றை நோக்கி சாளரத்தைத் திறக்கும் ஒவ்வொரு தியானமும், பற்றுறுதி எனும் அடித்தளத்தில் ஒரு புதிய அடுக்கினைச் சேர்க்கிறது. காலப்போக்கில், அந்த அடித்தளம் மிகவும் உறுதியாகிவிடுகிறது; அதனால் சந்தேகம் என்பது எப்போதும்போல் எழுந்தாலும், உங்களுடைய வீடு நிலைகுலைவதில்லை. இதற்கு காரணம், எல்லா கேள்விகளுக்கும் நீங்கள் விடை கண்டுவிட்டீர்கள் என்பது அல்ல; மாறாக, அந்தக் கேள்விகள் எட்ட முடியாத ஒரு உறுதியான தளத்தில் நீங்கள் நிற்பதினால்தான்.

## அதை நிரூபணம் செய்த ஒரு வாழ்க்கை

சாரிஜி மகராஜின் தொண்ணூற்று ஒன்பதாவது பிறந்த நாளை கொண்டாடும் இவ்வேளையில், இந்த அருட்செய்தி விவரிக்கும் அனைத்தையும் சற்று சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். அவர் அறிவியலில் தேர்ச்சி பெற்ற, தொழில் துறையில் அனுபவம் நிறைந்த, ஆழமாக ஆராய்கின்ற மனதைக் கொண்டிருந்தார்.

*ஹார்ட்ஃபுல்னெஸ் வழிமுறையில், தியானம் என்பது வெறும் உத்தி மட்டுமல்ல; அது ‘ஷ்ரத்தா’ என்பதை உருவாக்கும் ஒரு ஆய்வகமாகும். உண்மையான ஒன்றை நோக்கி சாளரத்தைத் திறக்கும் ஒவ்வொரு தியானமும், பற்றுறுதி எனும் அடித்தளத்தில் ஒரு புதிய அடுக்கினைச் சேர்க்கிறது.*

அவர் தன் குருவின்மீது கொண்டிருந்த பற்றுறுதி என்றும் கண்மூடித்தனமாக இருந்ததில்லை; ஏனெனில், அவர் தனது இதயம் எனும் ஆய்வகத்தில் ஒவ்வொரு நாளும் அதை சோதித்துப் பார்த்தார். அது ஒருபோதும் அரைமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்ததில்லை, ஏனெனில் அது அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்திருந்தது. அவரது இதயம், முற்றிலும் தயார்நிலையில் இருந்த நிலம் போன்று இருந்தது. அதன்மீது பிராணாஹுதி விழுந்தபோது, அதன் அறுவடை உலகெங்கும் உள்ள ஆர்வலர்களுக்கு உணவளித்தது; அது இன்றும் நமக்கு உணவளித்துக் கொண்டிருக்கிறது. அவர் தனது பற்றுறுதியைப் போற்றுமாறு நம்மிடம் கேட்கவில்லை, மாறாக நமது தனிப்பட்ட பற்றுறுதியை வளர்த்துக் கொள்ளுமாறு கோரினார். நமது இதயத்தை தயார்நிலையில் வைத்திருப்பதே நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய மிகச்சிறந்த காணிக்கை.

## தியான மண்டபத்தில் இருக்கும் இருவர்

தியானத்தில் ஈடுபட்டிருந்த அந்த இருவரைப் பற்றி மீண்டும் சிந்தித்துப் பார்த்து, தொடக்கத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு விடையளிப்போம். அவர்களுக்குள் என்ன வேறுபாடு இருந்தது? மண். ஒருவரின் இதயம் தயாராக இருந்தது, அது சரியான நிலையிலோ அல்லது முழுமையான நிலையிலோ இல்லையெனினும், சுய விருப்பத்தைக் கொண்டிருந்தது, ஏதோ ஒன்று உண்மையாக நிகழக்கூடும் என்ற அமைதியான உறுதிப்பாட்டையும், அதைப் பெறுவதற்கான தனது திறன் மீதான நம்பிக்கையையும் அது கொண்டிருந்தது. அந்த விருப்பம் என்பது திறமையோ அல்லது அதிர்ஷ்டமோ அல்ல; அது 'ஷ்ரத்தா'. கொதிக்கும் நீரில் உள்ள உருளைக்கிழங்கைப் போல, அந்த இதயம் ஆற்றல் பரிமாற்றத்தின் வெப்பத்தில் மென்மையடைந்து, தனக்கு வழங்கப்பட்டதை

ஏற்றுக்கொள்வதற்காக மேலும் திறந்த நிலையில் இருந்தது. இந்தத் தன்மையை வளர்த்துக்கொள்வதற்கான விருப்பம் உள்ள எவராலும் அதை வளர்த்துக்கொள்ள முடியும்.

மற்றொருவரின் இதயம் வறண்ட நிலையில் இருக்கவில்லை, எந்தவொரு இதயமும் ஒருபோதும் வறண்டு போவதில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அது தயார்நிலையில் இருக்கவில்லை; ஒருவேளை கவனச்சிதறல் கொண்டதாகவோ, தற்காப்பிற்காக தன்னை மூடிக்கொண்டோ இருந்திருக்கலாம் அல்லது “அதிகம் எதிர்பார்க்காதே “ என்று மெல்லிய குரலில் எச்சரிக்கும் கடந்தகால ஏமாற்றத்தின் பதிவினை சுமந்து கொண்டிருக்கலாம். அந்த மெல்லிய குரல் உங்களுக்குப் பரிச்சயமானதாக உள்ளதா? அது, கடந்த எட்டு அருட்செய்திகளின் மூலம் நாம் எதை அகற்ற முயன்றோமோ, அந்த அச்சத்தின் கடைசி எதிரொலிதான். அதற்கான மாற்று மருந்தும் முன்பு கூறியதுதான் - அது மிகப்பெரிய செயல்பாடு ஒன்றும் அல்ல, மாறாக நாம் எடுத்துவைக்கும் ஒரு சிறிய மற்றும் மீண்டும் பின்னோக்கிச் செல்லாத ஒரு அடிதான். இதயம், தற்காத்துக் கொள்ளும் தன்மையை சிறிது குறைத்துக்கொள்ளட்டும். நாளை இன்னும் சிறிதளவு திறந்த மனதுடன் தியானம் செய்யுங்கள். அந்தச் சிறிய அளவே போதுமானது. ‘ஷ்ரத்தா’ என்பது முழுமையாக உருவான நிலையில் ஏற்படுவதில்லை; அது, மண் ஆழமடைவதைப் போல, ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு தியானத்திலும், நம்பிக்கையுடன் செய்யப்படும் ஒவ்வொரு செயலிலும் வளர்கிறது.

நாம் அனைவரும் நம்பிக்கையூட்டுதலை நாடும் சிறு குழந்தைகளைப் போன்று, பல தலைமுறைகளாக பெறப்பட்ட அச்சங்களை ஆழமாக சுமந்து கொண்டிருக்கிறோம். ‘ஷ்ரத்தா’ என்பது ஆன்மா தன்னிடமே அளித்துக்கொள்ளும்

உறுதிப்பாடாகும். அது, ஒரு குழந்தை அனுமதியினை வெளியில் எதிர்நோக்குவதை நிறுத்திவிட்டு, தனது காலடியில் உள்ள நிலமானது எப்போதும் உறுதியாகவே உள்ளதையும், நம்பப்படுவதற்காக அது காத்துக்கொண்டிருப்பதையும் கண்டறிகின்ற தருணமாகும்.

மண்ணைத் தயார் செய்யுங்கள். அப்போது விதை, தான் என்னவாக மாற வேண்டும் என்பதை ஏற்கனவே அறிந்துள்ளது என்பதை நீங்கள் கண்டறிவீர்கள்.

அன்புடனும் மரியாதையுடனும்,

கம்லேஷ்

*பூஜ்ய ஸ்ரீ சாரிஜி மகராஜ் அவர்களின்*
*99வது பிறந்தநாள் ஆண்டு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்டது*
*ஜூலை 24, 2026*

# There's More Waiting For You

to go a little deeper

## HEARTFULNESS APP

A Quiet Place to Start

Carry your practice with you — download the free app and connect with a personal trainer anytime.

Free Download. Daily practice. Trainer always Available.

Heartfulnessapp.org

## MASTERCLASSES

Go Deeper at Home

Learn with Daaji relaxation, meditation, cleaning, and prayer through three freely offered video sessions.

Free Videos. Learn from Daaji. 3 Classes.

Heartfulness.org/global/masterclass

## RETREAT

Time for Just You

Step away from the noise and into a peaceful weekend that quietly deepens everything.

Peaceful Setting. Deepen Practice. Weekend Stays.

Heartfulness.org/global/retreat

## HEARTSPOTS

Find a Centre Near You

Your nearest meditation centre is closer than you think at no cost.

6000+ Centres. Heartful Community. Free to Visit.

Heartspots.heartfulness.org

Scan to download the free app, always there when you need it.
Start with a guided session, and let the practice find its own rhythm in you.
The journey inward begins with a single, still moment.

heartfulness
purity weaves destiny